1986 மே 3]

ராக்காயி அம்மன் கோயில் கும்பாபிஷேகம்.

610—(* வினா எண் 6901) திரு. மெ. ஆண்டி அம்பலம்): மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அழகர்கோவிலுள்ள ராக்காயி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயில், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு துணைக்கோயிலாகும். அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் கும்பாபிஷேக ஏற்பாடுகள் செய்யும்போது அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவையில் புதிய சிமிண்ட் ஆலை.

611—(* வினா எண் 2082) திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டத்தில் புதிய சிமிண்ட் ஆலை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் சிறு சிமெண்ட் ஆலை அமைக்க இரண்டு தனியார் நிறுவனங்கள், இந்திய அரசின் தொழில் நுட்பவியல் வளர்ச்சி தலைமை இயக்குநரின் பதிவு ஒப்புதல் பெற்றுள்ளன.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஜில்லாவிலே சிறிய 2 சிமெண்டு தொழிற்சாலைகள் தனியார்கள் ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு மூலதனத்தில் அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன் ?